අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
Ministry of Education, Higher Education and Vocational Education 'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/12/03/05

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2026.06. 08

**சுற்றுநிருப இலக்கம்: 18/2026**

அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள்,
அனைத்து மாகாண கல்விச் செயலாளர்கள்,
அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்து கோட்டப் பொறுப்பு பிரதி / உதவிக்கல்விப் பணிப்பாளர்கள்,
அனைத்துப் பாடசாலை அதிபர்கள்,

**அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் போது, தனிப்பட்ட தேவைகளுக்காகப் பெற்றோர்/பாதுகாவலர்களுடன் வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கு வெளிநாட்டு விடுமுறை வழங்குதல்**

அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் தனிப்பட்ட தேவைகளுக்காகப் பெற்றோர்/பாதுகாவலர்களுடன் வெளிநாடு செல்லும்போது, வெளிநாடு செல்லும் மாணவர்களின் விடுமுறை சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள 2002.10.04 ஆம் திகதியிட்ட එච්ආර්ඩී/ඊකිව්ඩී/2002/26 இலக்கச் சுற்றுநிருபம், 2000.06.06 ஆம் திகதியிட்ட 2000/29 இலக்கச் சுற்றுநிருபம், 2000.11.22 ஆம் திகதியிட்ட 2000/29 (1) இலக்கச் சுற்றுநிருபத்தின் திருத்தம், 1990.08.22 ஆம் திகதியிட்ட 1990/25 இலக்கச் சுற்றுநிருபம் உட்பட இது சம்பந்தமாக இவ்வமைச்சினால் இதற்கு முன்னர் வெளியிடப்பட்டுள்ள அனைத்துச் சுற்றுநிருபங்களும் இத்தால் இரத்துச் செய்யப்படுவதுடன், அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் போது, தனிப்பட்ட தேவைகளுக்காகப் பெற்றோர்/ பாதுகாவலர்களுடன் வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கான வெளிநாட்டு விடுமுறைகளை அனுமதிப்பது சம்பந்தமாக இனிவரும் காலங்களில் இச் சுற்றுநிருபத்தின் அறிவுறுத்தல்களே வலுவில் இருக்கும்.

2.0. அனைத்து அரச பாடசாலைகளிலும் தரம் 1 இலிருந்து தரம் 13 வரை (க.பொ.த. (உயர் தரம்) பரீட்சைக்கு முதன்முறையாகத் தோற்றும் வரை) உள்ள தரங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் வெளிநாடு செல்லும்போது, வெளிநாடு செல்லும் முழுக் காலப்ப குதிக்காகவும் ஒரே தடவையில் அனுமதி பெறப்பட வேண்டும் என்பதுடன், அக்காலப்பகுதி இரண்டு வருடங்களை தாண்டலாகாது.

2.1. மாணவர்கள் வெளிநாடு செல்லும்போது அதற்கான அனுமதியை வழங்குதல் பின்வரும் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

| வெளிநாடு செல்லும் கால எல்லை | அனுமதி வழங்கவேண்டிய உத்தியோகத்தர் | |
|---|---|---|
| | தேசிய பாடசாலைகள் | மாகாணப் பாடசாலைகள் |
| 31 நாட்கள் வரை | அதிபர் | அதிபர் |
| 31 நாட்களுக்கு மேல் மற்றும் ஆறு மாதங்கள் அல்லது அதற்கு குறைவு | வலயக் கல்விப் பணிப்பாளர் | வலயக் கல்விப் பணிப்பாளர் |
| ஆறு மாதங்களுக்கு மேல் மற்றும் ஒரு வருடம் அல்லது அதற்கு குறைவு | மாகாணக் கல்விப் பணிப்பாளர் | மாகாணக் கல்விப் பணிப்பாளர் |
| ஒரு வருடத்திற்கு மேல் மற்றும் இரண்டு வருடங்கள் வரை | கல்விப் பணிப்பாளர் (தேசிய பாடசாலைகள்) | மாகாணக் கல்விப் பணிப்பாளர் |

**2.2. வெளிநாடு செல்லும் கால எல்லை 31 நாட்கள் வரை அனுமதி வழங்குதல்**

வெளிநாடு செல்லும் காலம் 31 நாட்கள் அல்லது அதற்குக் குறைவு எனின், அந்த வெளிநாட்டு விடுமுறைக்கான அனுமதியானது மாணவன் கல்வி கற்கும் பாடசாலை அதிபரினால் வழங்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்காக இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தைப் பூர்த்தி செய்து, உரிய பாடசாலை அதிபரிடம் அனுமதிக்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**2.3. வெளிநாடு செல்லும் கால எல்லை 31 நாட்களுக்கு மேல் மற்றும் ஆறு மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான காலப்பகுதிக்கு அனுமதி வழங்குதல்**

வெளிநாடு செல்லும் காலம் 31 நாட்களை (01 மாதம்) விட அதிகமாகவும், ஆறு மாதங்கள் வரையுமாகுமாயின், அவ்வெளிநாட்டு விடுமுறைக்கான அனுமதியானது மாணவன் கல்வி கற்கும் பாடசாலை அமைந்துள்ள கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரினால் வழங்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்காக இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தை இரண்டு பிரதிகளில் பூர்த்தி செய்து, உரிய பாடசாலை அதிபரின் பரிந்துரையுடன் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் அனுமதிக்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்

**2.4. வெளிநாடு செல்லும் கால எல்லை ஆறு மாதங்களுக்கு மேல் மற்றும் ஒரு வருடம் அல்லது அதற்குக் குறைவான காலப்பகுதிக்கு அனுமதி வழங்குதல்**

வெளிநாடு செல்லும் காலம் ஆறு மாதங்களிலிருந்து ஒரு வருடம் வரையாகுமாயின், அவ்வெளிநாட்டு விடுமுறைக்கான அனுமதியானது மாணவன் கல்வி கற்கும் பாடசாலை அமைந்துள்ள மாகாணத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் வழங்கப்பட வேண்டும் என்பதுடன், அதற்காக இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தைப் பூர்த்தி செய்து, உரிய பாடசாலை அதிபரினதும் வலயக் கல்விப் பணிப்பாளரினதும் பரிந்துரையுடன் மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் அனுமதிக்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**2.5. வெளிநாடு செல்லும் கால எல்லை ஒரு வருடத்திற்கு மேல் மற்றும் இரண்டு வருடங்கள் வரையான காலப்பகுதிக்கு அனுமதி வழங்குதல்**

ஒரு வருடத்திற்கும் மேற்பட்ட காலப் பகுதிக்கு வெளிநாடு செல்லும் போது, மாகாண பாடசாலையொன்றின் மாணவராயின் அதற்காக அம்மாணவன் கல்வி கற்கும் பாடசாலை அமைந்துள்ள மாகாணத்தின் மாகாணக் கல்விப் பணிப்பாளரினதும், தேசிய பாடசாலையொன்றின் மாணவராயின் கல்விப் பணிப்பாளரினதும் (தேசிய பாடசாலைகள்) அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அதற்காக இணைப்பு 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவம் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்பதுடன், மாகாண பாடசாலை மாணவர்களாயின் அதிபரினதும் வலயக் கல்விப் பணிப்பாளரினதும் பரிந்துரைகளுடன் மாகாணக் கல்விப் பணிப்பாளரிடமும், தேசிய பாடசாலை மாணவர்களாயின் அதிபரினதும் மாகாணக் கல்விப் பணிப்பாளரினதும் பரிந்துரைகளுடன் கல்விப் பணிப்பாளரிடம் (தேசிய பாடசாலைகள்) அனுமதிக்காகச் சமர்ப்பித்தல் வேண்டும்

3.0 அரச தேவைகளின் நிமித்தம் வெளிநாடு செல்லும் (வெளிநாட்டுத் தூதுக்குழு கடமைகள், கட்டாய மருத்துவப் பயிற்சிகள், கட்டாய இராணுவப் பயிற்சிகள் அல்லது ஏனைய அரச தேவைகள்) உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்காக, சேவையின் தேவையின் அடிப்படையில் இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட வெளிநாட்டு விடுமுறைக்கு விண்ணப்பிப்பதாயின், தகவல்களை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் குறித்த வேண்டுகோள் இவ்வமைச்சுச் செயலாளரின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4.0 தம்மால் வெளிநாட்டு விடுமுறை பரிந்துரைக்கப்பட்ட மற்றும் அனுமதிக்கப்பட்ட மாணவர்கள் பற்றிய இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையொன்று பாடசாலையில் பேணப்பட வேண்டும் என்பதுடன்,

இணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்ட இந்த அறிக்கையின் பிரதியொன்றை ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை, தேசிய பாடசாலையாயின் தேசிய பாடசாலைகள் கல்விப் பணிப்பாளரிடமும், மாகாண பாடசாலையாயின் மாகாணக் கல்விப் பணிப்பாளரிடமும் சமர்ப்பிப்பதற்கு அனைத்து அதிபர்களும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

5.0 தரம் ஒன்றிற்கு அனுமதிக்கப்பட்ட கல்வி ஆண்டில், ஆறு மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்காக வெளிநாட்டு விடுமுறை வழங்கப்படலாகாது.

6.0 ஒரு வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்காக வெளிநாட்டு விடுமுறை பெற்ற ஒரு மாணவன்/ மாணவி, மீண்டும் ஆறு மாதங்கள் அல்லது அதற்கு மேற்பட்ட காலப்பகுதிக்காக வெளிநாட்டு விடுமுறைக்கு விண்ணப்பிப்பாரானால், குறைந்தபட்சம் ஒரு வருட காலப்பகுதியாவது இந்நாட்டின் அரச பாடசாலையொன்றில் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

7.0 இச் சுற்றுநிருபத்தின் 3.0 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அரச தேவைகளின் நிமித்தம் வெளிநாடு செல்லும் உத்தியோகத்தர்களின் பிள்ளைகளுக்கு மேற்கூறிய 5.0 மற்றும் 6.0 ஆகிய பிரிவுகள் பொருந்தாது.

8.0 வெளிநாட்டு விடுமுறைக்கு விண்ணப்பிக்கும் போது, குறைந்தபட்சம் வெளிநாடு செல்வதற்கு 02 வாரங்களுக்கு முன்னரே விண்ணப்பப் படிவங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெளிநாட்டு விடுமுறைக்கான அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமல் வெளிநாடு செல்ல முடியாது என்பதுடன், அத்தகைய மாணவர்கள் தொடர்பில் இவ்வமைச்சினால் 2023.12.29 ஆம் திகதியிட்டு வெளியிடப்பட்டுள்ள 53/2023 இலக்கச் சுற்றறிக்கையின் 2.1.6 ஆம் பிரிவுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**(பிரிவு 2.1.6 : பெற்றோர்/பாதுகாவலர்களின் எவ்வித அறிவித்தலும் இன்றி ஏதேனும் ஒரு மாணவன்/மாணவி பாடசாலை நடைபெறும் நாட்களில் தொடர்ந்து 40 நாட்கள் வருகை தராவிடின், அவர் பாடசாலையை விட்டு விலகிச் சென்ற ஒரு மாணவன்/மாணவி எனக் கருதி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்தகைய மாணவன்/மாணவி பாடசாலையை விட்டு விலகிய திகதியாகக் கருதப்பட வேண்டியது பாடசாலைக்கு வருகை தராத 41 ஆவது நாளாகும். அத்துடன், இது தொடர்பாக Education C-32 ஆவணத்தின் 31, 32, 33 ஆகிய நிரல்களில் தாமதமின்றி உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.)**

9.0 அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு விடுமுறைக் காலப்பகுதி முடிவடைந்த பின்னர், பாடசாலை நடைபெறும் 07 நாட்களுக்குள் மீண்டும் பாடசாலைக்குச் சமுகமளிக்காத பிள்ளைகள், பாடசாலையை விட்டு விலகிச் சென்ற மாணவன்/மாணவி எனக் கருதப்பட வேண்டும். அத்தகைய மாணவன்/மாணவி பாடசாலையை விட்டு விலகிய திகதியாகக் கருதப்பட வேண்டியது

பாடசாலைக்கு வருகை தராத 08 ஆவது நாளாகும். அத்துடன், இது தொடர்பாக Education C-32 ஆவணத்தின் 31, 32, 33 ஆகிய நிரல்களில் தாமதமின்றி உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

10.0 மேற்கூறிய 8.0 மற்றும் 9.0 ஆகியவற்றிற்கு இணங்க, பாடசாலைப் பெயர் இடாப்பிலிருந்து பெயர் நீக்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில், மீண்டும் பாடசாலையொன்றில் அனுமதிப்பதற்காக வசிப்பிடம் அமைந்துள்ள கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரிடம் விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து, பொருத்தமான மாகாண பாடசாலையொன்றைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

11.0 இச் சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகள் தொடர்பாக எழும் ஏதேனும் சிக்கல்கள் குறித்து, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழற்கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

12.0 இச் சுற்றுநிருபத்தில் சிங்கள மற்றும் தமிழ் மொழி வசனங்களிடையே ஏதேனும் முரண்பாடுகள் ஏற்படும் பட்சத்தில், அத்தகைய சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி வசனமே செல்லுபடியாகும்.

நாலக களுவெவ
செயலாளர்
கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு

பிரதிகள்:-

1. அனைத்து மாகாண ஆளுநர் செயலாளர்கள்
2. தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு
3. கணக்காய்வாளர் நாயகம்
4. பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
5. பரீட்சை ஆணையாளர் நாயகம்
6. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
7. கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் அனைத்துப் பதவிநிலை உத்தியோகத்தர்கள்
8. கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் அனைத்துக் கிளைப் பிரதானிகள்

இணைப்பு 01

<u>அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் போது, பெற்றோர்/பாதுகாவலர்களுடன் வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கான விடுமுறை விண்ணப்பப் படிவம்</u>

**(தரம் 01 இற்கு அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மற்றும் க.பொ.த. (உயர் தரம்) பரீட்சைக்கு முதன்முறையாகத் தோற்றும் நாள் வரை)**

(கல்வி, உயர்கல்வி மற்றும் தொழற்கல்வி அமைச்சின் செயலாளரின் .................. இலக்கச் சுற்றுநிருபத்திற்கு இணங்க)

பெயர்:-. ........................................................................................................................

(தாய்/தந்தை/சட்டபூர்வமான பாதுகாவலர்)

முகவரி :-........................................................................................................................

..................................................................................................................................

தொலைபேசி இலக்கம் :- ........................................................................................

மின்னஞ்சல் முகவரி (E-mail) :- ...............................................................................

20.........................................ஆம் திகதி

அதிபர்

.........................................................................கல்லூரி

1. மாணவன்/ மாணவியின் பெயர்கள் — தரம் மற்றும் வகுப்பு

   I. ............................................................... ...........................
   II. ............................................................... ...........................
   III. ............................................................... ...........................

2. வெளிநாடு செல்வதற்கான காரணம் தெளிவாகவும் விபரங்களுடனும்

   ..................................................................................................................................
   ...........................
   ..................................................................................................................................
   ...........................
   ..................................................................................................................................
   ...........................
   ..................................................................................................................................
   ...........................

3. வெளிநாடு செல்லும் நாடு/நாடுகள்:-

   ..................................................................................

4. விடுமுறைக் காலப்பகுதி:- 20......................... முதல் 20......................... வரை

5. வெளிநாடு செல்லும் கால எல்லைக்கு எதிரில் √ அடையாளமிடுக

- ☐ 31 நாட்கள் வரை
- ☐ 31 நாட்களுக்கு மேல் மற்றும் 06 மாதங்கள் அல்லது அதற்கு குறைவு
- ☐ 06 மாதங்களுக்கு மேல் மற்றும் ஒரு வருடம் அல்லது அதற்கு குறைவு
- ☐ ஒரு வருடத்திற்கு மேல் மற்றும் இரண்டு வருடங்கள் வரை

தங்களது பாடசாலையில் மேற்கூறிய பெயர்/ பெயர்களைக் கொண்ட மாணவன்/மாணவர்கள் என்னுடன் வெளிநாடு செல்வதால், அதற்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், வெளிநாட்டு விடுமுறை அனுமதிப்பத்திரத்தைச் சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழ மூலத்தில் வழங்குமாறும் தயவுடன் கோருகின்றேன்.

..........................................................................

தாய்/ தந்தை/ சட்டபூர்வமான

பாதுகாவலர்

க.கொ: தயவுடன் அடுத்த பக்கத்தைப் பார்க்கவும்.

**அதிபரின் அனுமதி/பரிந்துரை:-**

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழற் கல்வி அமைச்சின் செயலாளரின் ............... இலக்கச் சுற்றுநிருபத்திற்கு இணங்க, 20....................... ஆம் திகதி முதல் 20....................... ஆம் திகதி வரை வெளிநாட்டு விடுமுறைக்கு அனுமதியளிக்கின்றேன்/ அனுமதியளிக்கவில்லை/ வெளிநாடு செல்லும் காலப்பகுதி 31 நாட்களுக்கு மேல் என்பதால், வெளிநாட்டு விடுமுறையைப் பரிந்துரைத்து வலயக் கல்விப் பணிப்பாளரிடம் முன்னிலைப்படுத்துகின்றேன்.

20.................................. ..................................................................

அதிபர்

---

**வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதி/பரிந்துரை:-**

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழற்கல்வி அமைச்சின் செயலாளரின் ............... இலக்கச் சுற்றுநிருபத்திற்கு இணங்க, 20....................... ஆம் திகதி முதல் 20....................... ஆம் திகதி வரை வெளிநாட்டு விடுமுறையை அனுமதியளிக்கின்றேன்/ அனுமதியளிக்கவில்லை /வெளிநாடு செல்லும் காலப்பகுதி 06 மாதங்களுக்கு மேல் என்பதால், வெளிநாட்டு விடுமுறையைப் பரிந்துரைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் முன்னிலைப்படுத்துகின்றேன்.

20................................. .................................................................

வலயக் கல்விப் பணிப்பாளர்

---

**மாகாண/தேசிய பாடசாலைகளுக்கான மாகாணக் கல்விப் பணிப்பாளரின் அனுமதி/பரிந்துரை:-**

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழற்கல்வி அமைச்சின் செயலாளரின் ............... இலக்கச் சுற்றுநிருபத்திற்கு இணங்க, 20....................... ஆம் திகதி முதல் 20....................... ஆம் திகதி வரை வெளிநாட்டு விடுமுறையை அனுமதியளிக்கின்றேன்/ அனுமதியளிக்கவில்லை/ வெளிநாடு செல்லும் காலப்பகுதி 01 வருடத்திற்கு மேல் என்பதாலும் தேசிய பாடசாலையொன்றின் மாணவர் என்பதாலும், வெளிநாட்டு விடுமுறையைப் பரிந்துரைத்து கல்விப் பணிப்பாளரிடம் (தேசிய பாடசாலைகள்) முன்னிலைப்படுத்துகின்றேன்.

20.................................... ......................................................

மாகாணக் கல்விப் பணிப்பாளர்

---

**தேசிய பாடசாலைகளுக்கான கல்விப் பணிப்பாளரின் (தேசிய பாடசாலைகள்) அனுமதி:-**

20....................... ஆம் திகதி முதல் 20....................... ஆம் திகதி வரையான வெளிநாட்டு விடுமுறைக்கு அனுமதியளிக்கின்றேன்/ அனுமதியளிக்கவில்லை.

20.................................. ......................................................

கல்விப் பணிப்பாளர் (தேசிய பாடசாலைகள்)

- **வெளிநாடு செல்லும் முழுக் காலப்பகுதிக்காகவும் ஒரே தடவையில் அனுமதி பெறப்பட வேண்டும் என்பதுடன், அக்காலப்பகுதி 02 வருடங்களை மிஞ்சலாகாது. (02 வருடங்களுக்கு மேல் வெளிநாட்டு விடுமுறை நீடிக்கப்பட மாட்டாது.)**

இணைப்பு 02

**அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் போது, தனிப்பட்ட தேவைகளுக்காகப் பெற்றோர்/பாதுகாவலர்களுடன் வெளிநாடு செல்லும் மாணவர்களுக்கு வெளிநாட்டு விடுமுறை வழங்குதல் பற்றிய தகவல்களை இற்றைப்படுத்தல் (தரம் 01 இற்கு அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மற்றும் க.பொ.த. (உயர் தரம்) பரீட்சைக்கு முதல் முறை தோற்றும் நாள் வரை)**

பாடசாலை: ..................................................................................................

மாகாணம்: ..........................................................

பாடசாலைக்குரிய வலயம்: ....................................

| தொடர் இல | மாணவன்/ மாணவியின் பெயர் | தரம் மற்றும் வகுப்பு | அனுமதி இலக்கம் | செல்லும் நாடு | அனுமதிக்கப்பட்ட வெளிநாட்டு விடுமுறைக் காலம் ....முதல் .....வரை | இதற்கு முன்னராக பெற்ற வெளிநாட்டு விடுமுறைகள் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |